சிதம்பரம் ரயில் நிலையத்தில் 10 கிலோ கஞ்சா பறிமுதல்

கடலூர்

சிதம்பரம் ரயில் நிலையத்துக்கு நேற்று தெலங்கானா மாநிலம் சேரள பள்ளி பகுதியிலிருந்து கன்னியாகுமரி செல்லும் ரயில் நேற்றிரவு 7.30 மணி அளவில் வந்தது.

இந்நிலையில் சிதம்பரம் ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் அருண்குமார் தலைமையில் அந்த ரயிலில் பின்பக்கம் உள்ள பொதுப் பெட்டியில் சோதனை செய்தனர்.

அந்த ரயில் பெட்டியில் கேட்பாரற்று கிடந்த சாக்கு பையை சோதனை செய்ததில் சுமார் 10 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது. போலீஸார் அதை பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.3 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

சிதம்பரம் ரயில் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவுடன் ரயில்வே போலீஸார்.

அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், கஞ்சா மற்றும் ரேஷன் அரிசியை ரயில்களில் கடத்துவதை தடுக்கும் நடவடிக்கையாக சோதனையில் ஈடுபட்டபோது 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது என்று சிதம்பரம் ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் அருண்குமார் தெரிவித்தார்.

தேர்வானவர்களுக்கு நாளை பாராட்டு விழா

சென்னையில் ரூ.40 கோடியில் யுபிஎஸ்சி தேர்வு பயிற்சி மையம்

சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை

யுபிஎஸ்சி தேர்வுகளுக்கு 500 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில், அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி மையம் ரூ.40 கோடியில் சென்னையில் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரவையில் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்ற தமிழக மாணவர்களை பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பேசியதாவது:

தமிழக மாணவர்களின் திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான் 'நான் முதல்வன்' திட்டம். அந்த திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் விளைவாக, தற்போது வெளியான அகில இந்திய குடிமைப் பணி தேர்வு முடிவுகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது. அதாவது, 2016-ம் ஆண்டுக்கு பின்பு யுபிஎஸ்சி குடிமைப் பணி தேர்வுகளில் தேர்வாகும் தமிழக மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தது. 2021-ல் வெறும் 27 மாணவர்கள் மட்டும் தான் தேர்வாகினர்.

இவற்றை கவனத்தில் வைத்து நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. யுபிஎஸ்சி குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் ஆயிரம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கினோம். மேலும், முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் ஊக்கத் தொகையாக வழங்கினோம். மேலும், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் மூலமாக இந்த மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதன் பயனாக இந்த ஆண்டு தமிழகத்தில் இருந்து 57 மாணவர்கள் அகில இந்தியப் பணிகளுக்கு தேர்வாகியுள்ளனர். இவர்களில் 50 பேர் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்களாவர். தொடர்ந்து தேர்வில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வேண்டும். அதற்காக சென்னையில் செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி மையம் ரூ.40 கோடியில் அமைக்கப்படும். அதனுடன், இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பாராட்டு விழா அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் நாளை (ஏப்ரல் 26) நடத்தப்பட உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு

ஆரோவில்லில் சிறப்பு பிரார்த்தனை, மவுன அஞ்சலி

புதுச்சேரி

ஜம்மு - காஷ்மீர் பஹல்காமில் தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதால், உயிரிழந்த சுற்றுலா பயணிகளுக்காக ஆரோவில் சார்பில் அங்குள்ள கலாச்சார மையத்தில் நேற்று மாலை மவுனஅஞ்சலி செலுத்தப்பட்டது. 'ஒற்றுமையே வெல்லும்' என்ற உறுதிமொழியுடன் 70-க்கும் மேற்பட்ட ஆரோவில் சமூக உறுப்பினர்கள் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர். தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு ஆரோவில்லில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

'ஆரோவில் நாளை' மாத இதழில் இந்த துயரத்தை வெளிப்படுத்தும் சிறப்புப் பதிப்பு வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் ஆரோவில் அறக்கட்டளை செயலாளரான டாக்டர் ஜெயந்தி ரவி பேசுகையில், "பஹல்காமில் அமைதியான பள்ளத்தாக்கில் நிகழ்ந்த மனிதாபிமானமற்ற செயல் மிகுந்த வேதனை அளிக்கிறது. உயிரிழந்த அப்பாவிகளின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோன்ற துயர சம்பவங்கள் இனியும் நிகழக்கூடாது என்பதே எங்களது மனப்பூர்வமான பிரார்த்தனை" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் விழுப்புரம் எஸ்பி சரவணன், டிஎஸ்பி உமாதேவி, ஆரோவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தேர்வர்களுக்கு உதவும் வகையில்

டிஎன்பிஎஸ்சி தேர்வு விடைத்தாளில் புதிய மாற்றங்கள்

சென்னை

டிஎன்பிஎஸ்சி தேர்வர்களுக்கு உதவும் வகையில் ஓஎம்ஆர் விடைத்தாளில் பல்வேறு புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான மாதிரி விடைத்தாள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அ.ஜான் லூயிஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஓஎம்ஆர் விடைத்தாளில் புதிய மாற்றங்களை டிஎன்பிஎஸ்சி கொண்டுவந்துள்ளது. புதிய ஓஎம்ஆர் விடைத்தாளின் மாதிரி படிவம் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) '*OMR Answer Sheet-Sample*' என்ற தலைப்பின் கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

புதிய ஓஎம்ஆர் விடைத்தாளின் மாதிரி படிவம் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

தேர்வர்கள் 4 இலக்க வினாத் தொகுப்பு எண்ணை அதற்குரிய வட்டங்களில் கறுமை நிற பால் பாயின்ட் பேனாவை பயன்படுத்தி கருமையாக்க வேண்டும். மேலும், விடைத்தாளின் முதல் பக்கத்தில் பகுதி-2-ல் உறுதி மொழி அளித்து கையொப்பமிட வேண்டும். தேர்வாணையத்தால் இனிமேல் நடத்தப்பட இருக்கும் அனைத்து ஓஎம்ஆர் முறை தேர்வுகளிலும் பங்கேற்கும் தேர்வர்கள் புதிய மாதிரி ஓஎம்ஆர் விடைத்தாளை நன்கு பார்த்து, அறிந்துகொண்டு தேர்வெழுதுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சமூக வலைதளங்களை பயன்படுத்த

16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடை விதிக்க வேண்டும்

காங்கிரஸ் எம்எல்ஏ ராமச்சந்திரன் கோரிக்கை

சென்னை

தமிழகத்தில் 16 வயதுக்குட்பட்ட பதின்பருவத்தினர் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என காங்கிரஸ் எம்எல்ஏ ராமச்சந்திரன் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் நேற்று பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் காங்கிரஸ் எம்எல்ஏ எஸ்.டி.ராமச்சந்திரன் (அறந்தாங்கி) பேசியதாவது:

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்க வேண்டும். பதின்ம வயது குழந்தைகளிடம் சமூக வலைதளங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு நாடுகளில் 16 வயதுக்கு குறைந்த குழந்தைகள் ஸ்மார்ட்போன் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதேபோல், நமது மாநிலத்திலும் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்.

பல்வேறு நாடுகளில் 16 வயதுக்கு குறைந்த குழந்தைகள் ஸ்மார்ட்போன் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புற, மேல்தட்டு மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு 'குட் டச்', 'பேடு டச்' தொடர்பான பாலியல் புரிதல்களை விளக்கி விடுகிறார்கள். ஆனால், கிராமப்புற மக்களிடம் இதுகுறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. எனவே, பாடப் புத்தக அட்டையின் உட்புறத்தில் இது தொடர்பான விளக்கப் படங்களையும், வெளிப்புறத்தில் குழந்தைகளுக்கான '1098' போன்ற உதவி மைய எண்களையும் அச்சிட்டு வழங்க வேண்டும். மகளிர் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளிலும் கழிவறைகள் வசதிகள் செய்து தரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கு பதிலளித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ், "நலம் நாடி என்ற செயலி மூலமாக 21 வகையான குறைபாடுகளைக் கண்டறிந்து வருகிறோம். அந்த வகையில் 96,082 பேர் கண்டறியப்பட்டனர். அதில் மிகவும் கண்காணிப்பு தரவேண்டிய 17,676 பிள்ளைகளுக்கு இயன்முறையில் அவர்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவத்தையும் வழங்கி வருகிறோம். அனைத்து பள்ளிகளிலும் கழிப்பறை வசதிகள் உறுதி செய்யப்படும்'' என்று தெரிவித்தார்.

காஷ்மீர் தாக்குதலை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்தும் பாஜக

விசிக தலைவர் திருமாவளவன் குற்றச்சாட்டு

சென்னை

காஷ்மீர் தாக்குதல் சம்பவத்தை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பாஜக பயன்படுத்துவதாக விசிக தலைவர் திருமாவளவன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விசிக சார்பில் தமிழகம் மற்றும் இந்திய அளவில் பல்வேறு தளங்களில் சாதனைகள் படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறோம். முன்னாள் முதல்வர் கருணாநிதி, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்ட பலருக்கு விசிக விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, 'அம்பேத்கர் சுடர்' விருதுக்கு திராவிடர் பல்கலை. துணைவேந்தர் கே.எஸ்.சலன், 'பெரியார் ஒளி' விருதுக்கு நடிகர் சத்யராஜ், 'காமராஜர் கதிர்' விருதுக்கு புதுச்சேரி முன்னாள் முதல்வர் வைத்திலிங்கம், 'மார்க்ஸ் மாமணி' விருதுக்கு தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தியாகு, 'காயிதே மில்லத் பிறை' விருதுக்கு தமிழ்நாடு ஜமாத் உலமா சபைத் தலைவர் காஜா மொய்தீன் பாகவி, 'செம்மொழி ஞாயிறு' விருதுக்கு இலங்கை தமிழறிஞர் பேராசிரியர் சண்முகராஜ், 'அயோத்திதாசர் ஆதவன்' விருதுக்கு பவுத்த ஆய்வறிஞர் முனைவர் ஜம்புலிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விருது வழங்கும் விழா பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்து கூறியதாவது:

காஷ்மீரில் நடந்துள்ள பயங்கரவாத தாக்குதலுக்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும். இது நாட்டின் பாதுகாப்பை முன்னிறுத்தி வைக்கக் கூடிய கருத்து. அரசமைப்புச் சட்டம் 370-ஐ நீக்கினால் கூட பயங்கரவாதம் தொடரும் என்பதைத் தான் கொடூர நிகழ்வு உணர்த்துகிறது. சவுதி அரேபியா பயணத்தை முடித்து நாடு திரும்பிய பிரதமர், சம்பவ இடத்துக்கு செல்வார் என எதிர்பார்த்தால் பிஹார் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது அதிர்ச்சியளிக்கிறது. இந்த தாக்குதலை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பதே கசப்பான உண்மை.

சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட்களுக்கு எதிரான போர் என்ற பேரில் நடத்தப்படும் தாக்குதலில் பழங்குடியினரே படுகொலை செய்யப்படுகிறார்கள். இதை நிறுத்திவிட்டு மாவோயிஸ்ட் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அங்குள்ள வளங்களை ஆக்கிரமிக்கவே தாக்குதல் நடத்தப்படுவதாக மாவோயிஸ்ட் அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன. இப்படி இந்தியாவில் நிலவும் அமைதியின்மைக்கு மத்திய அரசுக்கு பொறுப்பேற்க வேண்டும். இதுபோன்ற சம்பவத்தின்போது இந்தியராய் ஒன்றிணைவோம் என பேசும் பாஜகவினர், சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு அரசியலை விதைக்கின்றனர்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பை வரவேற்கிறோம். கல்வி நிறுவனங்களில் சாதிய பிரச்சினையை களைய நீதிபதி சந்துரு அறிக்கை பரிந்துரை அடிப்படையில் சட்டமியற்ற வேண்டும். கட்சிக் கொடி கம்பங்களை அகற்றும் தீர்ப்பை எதிர்த்து விசிக மேல்முறையீடு செய்யும். தமிழக அரசும் வழக்குத் தொடர வேண்டும்.

துணைவேந்தர் மாநாட்டின் மூலம் பதற்றத்தை ஏற்படுத்துவதோடு, துணைவேந்தர்களுக்கு தேவையற்ற நெருக்கடியை ஆளுநர் உருவாக்குகிறார். மாநாட்டில் பங்கேற்பதை துணை குடியரசுத் தலைவர் தவிர்க்க வேண்டும்.

இபிஎஸ் மீதான அவதூறு வழக்கு விசாரணைக்கு தடை

சென்னை

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. கோவை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதற்கும் அவருக்கு விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளது.

கோவை விமான நிலையத்தில் கடந்த 2024 ஜூன் மாதத்தில் செய்தியாளர்களை சந்தித்த அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தனக்கு எதிராக அவதூறு கருத்துகளை தெரிவித்ததாக கூறி, அதிமுக முன்னாள் எம்.பி.யான கே.சி.பழனிசாமி, கோவை நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த நீதிமன்றம், விசாரணைக்கு ஆஜராகுமாறு இபிஎஸ்-க்கு சம்மன் அனுப்பியது.

இந்த வழக்கை ரத்து செய்ய கோரியும், விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க கோரியும் இபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ்-க்கு எதிரான அவதூறு வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்தும் அவருக்கு விலக்கு அளித்தும் உத்தரவிட்டார். இந்த வழக்கில் 4 வாரத்துக்குள் பதில் அளிக்குமாறு கே.சி.பழனிசாமிக்கு உத்தரவிட்டு விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

---

sivakumaryv@hindutamil.co.in

உள்ளாட்சிகளில் பதவிநீக்கம் செய்யப்பட்ட இடங்களுக்கு தேர்தல் நடத்தப்படாது

உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உத்தரவாதம்

சென்னை

அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறி சென்னை மாநகராட்சி 189-வது வார்டு கவுன்சிலர் பாபு, 5-வது வார்டு கவுன்சிலர் கே.பி.சொக்கலிங்கம், தாம்பரம் மாநகராட்சி 40-வது வார்டு கவுன்சிலரும், மண்டலத் தலைவருமான ஜெயபிரதீப், உசிலம்பட்டி நகராட்சித் தலைவரும், 11-வது வார்டு கவுன்சிலருமான சகுந்தலா ஆகியோரை பதவிநீக்கம் செய்து நகராட்சி நிர்வாகத்துறை செயலர் கடந்த மார்ச் 27-ம் தேதி உத்தரவிட்டார்.

தங்களை பதவி நீக்கம் செய்தது செல்லாது என அறிவிக்கக்கோரி இந்த உத்தரவை எதிர்த்து 4 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் நீதிபதி ஜெ.சத்யநாராயண பிரசாத் முன்பாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை, தாம்பரம் கவுன்சிலர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் எஸ்.ஆர்.ராஜகோபால், டி.மோகன் ஆகியோரும், உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் சார்பில் வழக்கறிஞர் டி. செல்வமும் ஆஜராகி, 'இந்த 4 பேரையும் பதவி நீக்கம் செய்தது சட்டப்பூர்வமான விதிமுறைகளுக்கு எதிரானது. அவர்கள் தரப்பு விளக்கத்தைக் கோராமல் ஒருதலைபட்சமாக பதவியில் இருந்து நீக்கியுள்ளனர்.

இது சட்டவிரோதம். எனவே, பதவி நீக்க உத்தரவுக்கு தடை விதித்து அதை ரத்து செய்ய வேண்டும்' என வாதிட்டனர்.

ஜூன் 9-க்கு தள்ளி வைப்பு

அப்போது அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் எம்.சுரேஷ்குமார் ஆஜராகி, இந்த வழக்குகள் முடிவுக்கு வரும் வரை நான்கு பதவிகளுக்கும் தேர்தல் நடத்தக் கூடாது என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், மாநில தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அதுவரை தேர்தல் நடத்தப்படாது என்றும் தெரிவித்தார். அதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை வரும் ஜூன் 9-க்கு தள்ளிவைத்துள்ளார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

தமிழ்நாடு அரசு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை–28

தொலைபேசி எண்: 044–29864447

ஒப்பந்தப் புள்ளி அழைப்பு – திருத்தங்கள்

(ந.க.எண்.10436/2025/மா.தி1, நாள்:23. 04.2025)

சிறப்பு நிதி 2025–26 ன் கீழ் 08.04.2025 அன்று ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது, மேற்கண்ட அறிவிப்பில் இரண்டு வரிசை எண்களில் மட்டும் கீழ்காணும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது, வரிசை எண் 1–ல் 16 மாநகராட்சிகள் என்பதற்கு பதிலாக 17 மாநகராட்சிகள் எனவும், வரிசை எண் 2–ல் ரூ.275.00 லட்சத்திற்க்கு பதிலாக ரூ.443.00 இலட்சம் எனவும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது

நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை–28

செமதொஇ/1691/ஒப்பந்தப்புள்ளி/2025

OMKARA ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 9, எம்.பி. நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் 641607. தொலைபேசி எண். 04212221144

கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என்.சி. கேல்கர் மார்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை 400028

(பிற்சேர்க்கை IV A (விதி 8(6) மற்றும் 9(1)ஐ பார்க்கவும்)

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு

மின்னணு ஏலத் தேதி : 16 மே, 2025

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் தெரிவிப்பது யாதெனில், ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன/ஈடாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், M/S டிபிஎஸ் வங்கி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. 30.11.2023 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி, லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட் (தற்போது டிபிஎஸ் வங்கி இந்தியா லிமிடெட்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்(கள்) ஆகியோரின் கடனை நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் துவக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கியில் பத்திரமயமாக்கல் மற்றும் சொத்து மறுசீரமைப்பு நிறுவனமாக பதிவுசெய்யப்பட்ட M/S. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL), பதிவு அலுவலகம் : 9, எம்.பி. நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் 641607 மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என். சி. கேல்கர் மார்க், ஆர். ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028க்கு ஒதுக்கியது மற்றும் இது ஓம்காரா PS 07/2023-24 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்படுகிறது.

மேலும், மேற்கண்ட சொத்துக்கள் ''உள்ளது உள்ளவாறு அடிப்படையில்'', ''எப்படி உள்ளதோ அப்படியே'', ''எந்தவித மாற்றமும் இல்லாமல்'' கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படும். ரிசர்வ் விலை, டேவணித் தொகை டெபாசிட் (EMD) மற்றும் பிற விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வ. எண்	சொத்து	சொத்து குறித்த விவரம்	ரிசர்வ் விலை (ரூ.)	டேவணித் தொகை டெபாசிட் (ரூ.)	அதிகரிப்பு மதிப்பு
1	காலி மனை	மனை : ஆர்.எஸ்.எண்.62/18, 62/181, பாலாஜி நகர் சாலை, சலவதி கிராமம், திண்டிவனம். விஸ்தீரணம் 1050 சதுர அடி. ஏ. கமலக்கண்ணன் என்பவருக்குச் சொந்தமானது.	13,00,000	1,30,000	15,000
2	காலி மனை	மனை: சர்வே எண்.145/9, சர்வே எண்.40/12, 102/16, மானூர் - காலூர் பிரதான சாலை, மானூர் கிராமம், பஞ்சாயத்து, திண்டிவனம், விஸ்தீரணம் 2180 சதுர அடி. கே. தேவி என்பவருக்குச் சொந்தமானது.	5,00,000	50,000	10,000
3	காலி மனை	மனை : சர்வே எண்.116/31, 116/6B, மனை எண்.4, ஸ்ரீ ஜெயலட்சுமி நகர், திண்டிவனம் - மரக்காணம் பிரதான சாலை, மானூர் கிராமம், திண்டிவனம். விஸ்தீரணம் 1386 சதுர அடி. கே. தேவி என்பவருக்குச் சொந்தமானது.	2,60,000	26000	10,000
4	குடியிருப்பு சொத்து	வீடு, கதவு எண். 19/216, சர்க்கார்தோப்பு, திண்டிவனம். விஸ்தீரணம் 2183 சதுர அடி. யூ. ராகவன் என்பவருக்குச் சொந்தமானது.	70,00,000	7,00,000	50,000

கோரிக்கை அறிவிப்பு தேதி : 14.05.2018 | **சுவாதீனத் தேதி : 07.02.2019**

நிலுவைத் தொகை ரூ.1,84,12,190/- (ஒரு கோடியே எண்பத்து நான்கு லட்சத்து பன்னிரண்டாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்)

டேவணித் தொகை டெபாசிட் செலுத்துதல் மற்றும் ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 15.05.2025 அன்று மாலை 6:00 மணி வரை

ஏலத் தேதி மற்றும் நேரம்: 16.05.2025 நேரம்: மதியம் 03:00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

ஆய்வு தேதி மற்றும் நேரம்: 09.05.2025

1. EMDஐ டெபாசிட் செய்யும் ஏலதாரர்கள், உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தரவைப் பதிவேற்றுதல், ஏலத்தைச் சமர்ப்பித்தல், மின்னணு ஏல செயல்முறை குறித்த பயிற்சி போன்றவற்றில் உதவி தேவைப்பட்டால், மின்னணு ஏல சேவை வழங்குநர் "M/S. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்", தொலைபேசி உதவி எண்: +91 7291981124/25/26, உதவி மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, திரு. பவிக் பாண்டியா, 8866682937, மின்னஞ்சல் முகவரி : maharashtra@c1india.comல் தொடர்பு கொள்ளலாம்
2. சொத்து தொடர்பான ஏதேனும் விவைவல்களுக்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி திரு. ஆஷிஷ் நங்கியா (மொபைல்:9323642445) அவர்களைத் தொடர்பு கொள்ளவும். மின்னஞ்சல்: ashish.nangia@omkaraarc.com அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
3. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016ன் பிரிவு 29Aக்கு உட்பட்டு அறிவிப்பை வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில், செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு http://omkaraarc.com/auction.phpல் **கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்.**

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6)மற்றும் 9(1)ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1) மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனையை நடத்துவது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும், அவர்கள் விரும்பினால் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை கட்டணம் மற்றும் செலவுகளுடன் செலுத்துவதன் மூலம் சொத்துக்களை மீட்டுக்கொள்ளவும், மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) / உத்தரவாததாரர்களுக்கு இந்த அறிவிப்பானது பதினைந்து (15) நாட்களுக்கான ஒரு கட்டாய அறிவிப்பாகும். பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர் விருப்பப்படி, கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (5)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சொத்து விற்கப்படும்.

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
(ஓம்காரா PS 07/2023-24 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்படுகிறது)

தேதி: 25.04.2025
இடம்: மும்பை

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD., Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).